SAS SCHOOL OF ARTS AND SCIENCE ISO 21001:2018 CERTIFIED — VINAYAKA MISSION'S RESEARCH FOUNDATION DEEMED TO BE UNIVERSITY (Declared Under Section 3 of the UGC Act, 1956)

# திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார் முத்தமிழாயம் வழங்கும் தமிழ்ப்புத்தாண்டு சிறப்பு நிகழ்வு-2021

*“எல்லோரும் இன்புற்றிருக்க*
*எத்திசையும் எழில் கமழ்ந்திட*
*அள்ளக்குறையா*
*ஆனந்தம் தந்திடும்*
*செம்மதுர செழுந்தமிழ் மகளின்*
*சித்திரை பிறப்பு சிறப்பாய்*
*அனைவருக்கும் அமைந்திட வேண்டும்.”*

என்று இறைவனை வணங்கி, திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார் அவர் வாழ்வைப் போற்றும் வண்ணம் விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனத்திற்குட்பட்ட கலை மற்றும் அறிவியல் புலம், ஆறுபடை வீடு தொழில்நுட்ப வளாகம், தமிழ்த்துறை சார்பில் ஏப்ரல் -16ஆம் தேதி பிற்பகல் - தமிழ்ப்புத்தாண்டு சிறப்பு நிகழ்வு-2021 நிகழ்வு நடந்தேறியது.

தமது வாழ்த்துக்களையும், ஆசிகளையும், ஆதரவையும் மேதகு டாக்டர் அ.ச.கணேசன் (வேந்தர்), டாக்டர் அனுராதா கணேசன் (இயக்குநர்) அவர்கள் அளித்தனர்.

நிகழ்விற்கு கலை மற்றும் அறிவியல் புலத்தின் இயக்குநர் முனைவர் இரா.ஷண்முகவள்ளி அவர்கள் தலைமை வகித்து அவர் பேசுகையில் மாணவர்கள் தமிழ் மொழியின் நுண்ணிய ஆழமான இலக்கணங்களையும், இலக்கியங்களை நன்கு கற்க வேண்டும் என்றும், பின்பு இலக்கியம் கூறும் வாழ்வியல் கருத்துக்களை கடைபிடித்து வாழ வேண்டும் என்றார். தமிழர்கள் பல்வேறு விழாக்களை நமக்கு தந்துள்ளனர் அதனை அறிந்து அதன் புகழையும், விழுமியக் கருத்துகளை அனைவரும் அறியச்செய்திடல் வேண்டும் என உரையாற்றினார்.

‘இருளை நீக்கி ஒளியை அருள தமிழ் மகளே வருக’ என்ற கவிதை வரியினைப்போலவே அனைவரும் புரிந்து கொள்ளும் படியாக உற்சாகமாக **தமிழ்ப்புத்தாண்டு-2021** தம் உரையை தொடங்கினார் சிறப்பு விருந்தினர் **திரு. ஆ.சந்திரசேகர்.** அவர் பேசுகையில் தமிழர்களின் வாழ்வில் திருவிழாக்கள் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். மேலும் தமிழர்கள் தங்களின் உழைப்பை கொண்டாடும் விதமாக பல்வேறு மாதங்களில் பல்வேறு திருவிழாக்களை கொண்டாடுகின்றனர். மேலும் பருவ காலத்திற்கு ஏற்ப திருவிழாக்களின் கொண்டாட்ட விதிமுறைகள் அமையும் என்றும், தமிழர்கள் விவசாயம் சார்ந்து பல்வேறு தொழில்களை செய்வதோடு, உழைப்பவர்களின் களைப்பு நீங்கவும், அறத்தையும் வழியுறுத்தியும் இவ்விழாக்கள் கொண்டாடப்படுகின்றது என்றார். பேராசிரியர்கள், மாணவர்கள் சித்திரை பெருவிழா பற்றிய பல்வேறு ஐயங்களை வினாவாக எழுப்பி அதற்கு விடையும் தேடிக்கொண்டனர். சித்திரை பெருவிழா பற்றி படக்காட்சிகளின் மூலமாக விளக்கத்துடன் உரை வழங்கினார். மேலும் இந்நிகழ்வு அனைவருக்கும் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

சிறப்பு விருந்தினரை முறையாக அறிமுகம் செய்து வைத்தார் தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் ப.ஜெயபாரதி அவர்கள். விழா – தொகுத்து வழங்குதலை திரு அ.முத்துக்குமார் அவர்களும், வரவேற்புரையை திரு.சு.பழனியப்பா அவர்களும், நன்றியுரையை முனைவர் ந.சுரேஷ் அவர்களும் வழங்கி சிறப்பித்தனர். தமிழ்த்துறை சார்பில் நடைபெற்ற இணைவழி நிகழ்வில் மாணவ மாணவிகள், அனைத்து துறை சார்ந்த பேராசிரியர்கள், மற்றும் தமிழ் ஆர்வலர்கள் ஆகியோரின் நல் ஆதரவுடன் இவ்விழா இனிதே நடைபெற்று முடிந்தது.






SAS
SCHOOL OF ARTS AND SCIENCE
ISO 21001:2018 CERTIFIED

VINAYAKA MISSION'S RESEARCH FOUNDATION
DEEMED TO BE UNIVERSITY
(Declared Under Section 3 of the UGC Act, 1956)






SAS
SCHOOL OF ARTS AND SCIENCE
ISO 21001:2018 CERTIFIED

VINAYAKA MISSION'S RESEARCH FOUNDATION
DEEMED TO BE UNIVERSITY
(Declared Under Section 3 of the UGC Act, 1956)




